# முத்தமிழ் ஆயம் வழங்கும்

# “இலக்கியப்பதாகை” – (பறப்பு-2)




“ நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.”

எனும் குறளுக்கேற்ப, தனது பண்பான சொற்களால் பிறர் பயன்படும்படி வாழ்ந்து, இலக்கியத்திற்கும் வாழ்வளித்த நமது திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனாரின் நினைவாக, விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குட்பட்ட ஆறுபடைவீடு தொழிற்நுட்ப வளாகம் - கலை மற்றும் அறிவியல் புலத்தின் சார்பில் இரண்டாம் நிகழ்வாக மார்ச் 22-ல் “இலக்கியப்பதாகை” (பறப்பு-2) நிகழ்வு நடந்தேறியது.






இலக்கியம் என்பது ஒரு காலக்கண்ணாடி அக்கண்ணாடியில் முகம்பதித்து தம் இலக்கிய பதிவுகளை பதிவிட திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனாரின் முத்தமிழாயம் விரும்புகிறது.

தமிழ்த்துறை “இலக்கியப்பதாகை” (பறப்பு-2)-ல் திரு. ப்ரியாதம்பி அவர்கள் (எழுத்தாளர், ஊடகவியலாளர், திரைக்கதை ஆசிரியர்) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, மாணவர்களிடம் “தற்கால சினிமா” என்ற தலைப்பில் உரையாற்றினார். தற்கால சினிமாவின் போக்கு,பெண்ணியம்,அரசியல், எதிர்பார்ப்பு, காதல் புரிதல்கள், தலைமுறை இடைவெளி, சினிமாவில் கதாநாயகன் பாத்திரபடைப்பில் திரையில் காட்டுவது போல் நடைமுறையில் எதார்த்தவியலுக்கு சாத்தியமில்லை போன்ற செய்திகளையும் கூறி, இக்கால இளைய சமுதாயம் தன் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், அடுத்த நிலை நோக்கி நகரவும், மன அழுத்தங்களிலிருந்து வெளியே வரவேண்டும் என்பதையும், அதற்கான மனப்பக்குவத்தை பெற வேண்டும் என்பதனை அழகான தமிழில் கலந்துரையாடினார்.

மாணவர்களும் பல்வேறு வினாக்களை கேட்டு, தங்களது ஐயங்களை தீர்த்தனர். இது மாணவர்களின் மனதிற்கு நன்மருந்தாக அமைந்தது.

தமது வாழ்த்துகளையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகு டாக்டர்.அ.ச.கணேசன் (வேந்தர்) டாக்டர்.அனுராதா கணேசன் (இயக்குநர்) மற்றும், முனைவர்.மு.பொன்னவைக்கோ (முதன்மை கல்வி அதிகாரி விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்) அவர்கள் அளித்தனர்.

அறிமுக உரையை கவிஞர் பிருந்தா அவர்கள் வழங்கினார். முன்னிலையாக முனைவர் ஆர்.சண்முகவள்ளி (இயக்குநர்) கலை மற்றும் அறிவியல் புலம் அவர்கள் முன்னிலை வகித்து விழாவினை சிறப்பித்தார்.

தமிழ்த்துறை சார்பில் முனைவர் ப.ஜெயபாரதி (துறைத்தலைவர்), திரு. அ.முத்துக்குமார் (உதவிப்பேராசிரியர்) ஆகியோர் விழா ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ்விழா, மாணவ மாணவியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள், அனைத்து துறை சார்ந்த பேராசிரிய பெருமக்களின் ஆதரவுடன் இனிதே நிறைவு பெற்றது.











~~~~~*****~~~~~
~~~~~